REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 20உ செவ்வாய் (5—11—57) ★ ☆ வெளியூர்: ஐப்பசி 21உ புதன் (6—11—57) [இதழ் 123

தனிப் பயிற்சிக்குத் தென்னாட்டினர் எத்தனை பேர்?

புதுடில்லி, நவ. 5—

ரூர்கேலா, பிலாய், துர்காபூர் ஆகிய வடநாட்டு இரும்பு ஆலைகளில் பணிபுரிவதற்காக 2,000 எஞ்சினியர்களுக்கு—16,000 டெக்னிஷியன்களுக்கு தனிப்பயிற்சி அளிக்கப்படுவதற்கான திட்டம் டில்லியில் தயாராகிவிட்டதாம்! இந்தப் பயிற்சி 3 ஆண்டுகளில் பூர்த்தியாகும்; இத்தகைய தனிப் பயிற்சிக்கு எவ்வளவு செலவாகுமென்ற செய்தி வெளியிடப்படவில்லை. எப்படியிருந்தாலென்ன? வடநாட்டுக்கு மற்றொரு இலாபம்! அதிலே தென்னாட்டினரா இடம் பெறப் போகின்றனர்?

மதுவிலக்குக் கொள்கையில் அவநம்பிக்கை

காங்கிரசின் பலவீனத்திற்கு காரணம் அதுதானும்

இடைவிடாத பிரச்சாரமே திட்டத்திற்கு வெற்றி தரும் என்கிறார் காங்கிரஸ் மந்திரி ஒருவர்

ஷோலாப்பூர், நவ. 2—

காங்கிரசாரிடையேகூட, மதுவிலக்கில் நம்பிக்கையில்லாதவர்கள் தோன்றிவிட்டனராம்!

காங்கிரசின் பலவீனத்திற்கு, ஒரு பெரிய சமூக சீர்திருத்தத்தை அமுல் செய்வதை எதிர்க்கும் அந்தக் காங்கிரசாரின் போக்குத்தான் காரணமாம்!

இவ்வாறு, பம்பாய் மதுவிலக்கு மந்திரி ரதுபாய் அடானி என்பார், காங்கிரஸ் ஊழியரிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"மதுவிலக்குத் தோற்றுவிட்டது எனக் கூறுவோர், அரசியல் இலாபம் தேட எண்ணும் எதிர்க் கட்சிக்காரர்கள்தான் என்றும் கூறினாராம்!

"மதுவிலக்கு ஒரு தேசிய சீர்திருத்தமாக மேற்கொள்ளப்பட்டது. காங்கிரசார் மட்டுமின்றி இதர கட்சியினரும் அவ்வாறே அதனைப் புகழ்ந்தனர்; எனவே, மதுவிலக்கு தோல்வியுற்றுவிட்டது என்று கூறிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக மதுவிலக்கினை அமுல் செய்வதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். சட்டத்தால் மட்டும் குடிப்பழக்கத்தை ஒழிக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். மதுவிலக்கில் நம்பிக்கை கொண்டவர்கள், மதுவிலக்கின் சமூக-பொருளாதார நன்மைகள் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்து இடைவிடாத பிரச்சாரம் செய்தால்தான் திட்டம் வெற்றிபெறும்" என்றும் அவர் கூறினாராம்.

சுற்றுப்புறப் பகுதிகளில் பஸ் போக்குவரத்து

ஏற்று நடத்துவது பற்றி அமைச்சர் தகவல்

சென்னை, நவ. 4—

"சென்னை நகர பஸ் போக்குவரத்தை இப்போது அரசாங்கம் ஏற்று நடத்தி வருகிறது. சில வழிகளில் தனியார் நடத்தும் பஸ்கள் போட்டியிடுகின்றன. அந்தப் பஸ்களையும் ஏற்று நடத்த அரசாங்கம் கருதியுள்ளது"

என்று அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

"திருவொற்றியூர்—தங்கசாலை இடையே ஓடும் 56, 57-ம் பஸ் வழிகள் முழுவதையும் அரசாங்கம் முதலில் ஏற்று நடத்தும்" என்றும் அவர் மேலும் கூறினார்.

கோவை மாவட்டத்திற்கு உர விநியோகம்

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, நவ. 4—

1956—57ம் ஆண்டில் கோவை மாவட்டத்திற்கு நெல் சாகுபடி நிலங்களின் உரத்திற்காக ரூ. 2·25 இலட்சமும், கரும்பு சாகுபடிக்கு ரூ. 1·87 இலட்சமும் கடனுகத் தர ஒதுக்கப்பட்டதாம்.

ஆனால் ரூ. 2·19 இலட்சம் நெல் பயிராகும் நிலங்களுக்கு உரக் கடனுகவும், ரூ. 1·93 இலட்சம் கரும்பு பயிரிட உரக் கடனுகவும் தரப்பட்டுள்ளது என்று அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

கோயில் நிலங்களில் ஏன் தாழ்த்தப்பட்டவர்களை குடியமர்த்தக் கூடாது?

சட்ட மன்றத்தில் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேள்வி

சென்னை, நவ. 4—

"தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்ட நில ஆர்ஜிதம் செய்யும் விஷயம் பற்றி தற்போது மாவட்ட கலெக்டர்களின் நிர்வாகத்தில் உள்ள ரெவினியூ நிறுவனம் கவனித்து வருகிறது" என்று அமைச்சர் கக்கன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

"இதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் முழுவதும் செலவு செய்யப்படாமல் காலாவதியாகி விடுகிறதும் 'உண்மை" என்று அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

"அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களில் மட்டுமே இப்பொழுது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டப்படுகிறது. 'அரிசன்' என்றால் ஆண்டவனின் பிள்ளைகள் என்று பொருள்; ஏன், ஆண்டவனுக்குச் சொந்தமாக உள்ள 8 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படும் நிலங்கள் நீங்கலாக மற்ற நிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தரக்கூடாது?"

என்று கழக உறுப்பினர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"அதையும் இப்போது செய்து வருகிறோம்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

நிதி அமைச்சர் குறுக்கிட்டு, "எல்லா நிலங்களும் ஆண்டவனுக்குத்தான் சொந்தம்" என்றார்!

உடனே தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், 'உங்கள் அரசாங்க அறிக்கையில் உள்ளதைத்தான் நான் கூறினேன்' என்றார்.

ஐ. நா. ஆயுதக் குறைப்புக் குழுவிலிருந்து ரஷ்யா விலகிவிடும்!

விஞ்ஞான வெற்றிகள் தரும் புதிய பலத்தின் விளைவு?

நியூயார்க், நவ. 4—

"இப்போதுள்ள அமைப்புப்படியே ஆயுதக்குறைப்பு கமிஷனிலும், அதன் துணைக்குழுவிலும் தாங்கள் கலந்துகொள்வதற்கில்லை"

என்று, ரஷ்யா அறிவித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

ஐ. நா. அரசியல் குழு, ஆயுதக் குறைப்புப் பிரச்சினை பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில், டென்மார்க் பிரதிநிதி, 'இந்தத் துறையில் ஒத்துழைத்து நல்லதோர் முடிவு காணுவதற்குக் கிட்டியுள்ள சந்தர்ப்பத்தை பெரும் வல்லரசுகள் கைவிட்டு விடக் கூடாது' என வேண்டியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் பெருமழை

பல இரயில்கள் ரத்து; குடிசைவாழ் மக்கள் அவதி

சென்னை, நவ. 5—

கடந்த இரண்டு நாட்களாக, தமிழகத்தின் பல பகுதிகளிலும் தலைநகரிலும் பெருமழை பெய்து வருகின்றது.

சென்னை, மற்றும் சுற்றுப்புறங்களில் நேற்று இரவு பகலாக இடைவிடாது மழை பெய்து கொண்டிருந்தது. இன்றும் காலை முதல், மழைத்தூறல் ஓயவில்லை.

நகரில் மட்டும் சுமார் 10 அங்குல மழை பெய்துள்ளது; விளைவாக, சென்னையிலிருந்து டில்லி, கல்கத்தா செல்லும் இரயில்கள் ரத்து செய்யப்பட்டுவிட்டன.

சென்னை — கூடூர், மற்றும், கூடூர்—ரேணிகுண்டா இடையில் இரயில் பாதைகளில் உடைப்பு ஏற்பட்டிருப்பதால் அந்த இரண்டு இரயில்களும் நிறுத்தப்பட்டுவிட்டன.

வேறு சில பாசஞ்சர் இரயில்களும் நிறுத்தப்பட்டுவிட்டன.

சென்னைக்கு வந்து சேரவேண்டிய வண்டிகளும் சில, பாதி வழியில் நிறுத்தப்பட்டுவிட்டன.

எச்சரிக்கையுடன் இரயில்களை ஓட்டி வருவதால் பெரும் கால தாமதமும் ஏற்பட்டுவருகிறது.

குடிசைகள் மூழ்கின!

நகரில் பெய்துவரும் பெருமழையின் காரணமாக, குடிசைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

மேட்டுப் பிரதேசங்களில் அமைந்த குடிசைகளுக்கு அவ்வளவு கஷ்டம் இருக்கவில்லை; ஆனால், பள்ளங்களில் அமைந்த குடிசைகள் நீரில் மூழ்கின; பெருங் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர் மக்கள்!

டி. டி. கே.-யின் மேலைநாட்டுப் பயணம்

கடமையைச் செய்துவிட்டாராம்

சென்னை, நவ. 4—

தான் அன்னிய நாடுகளில் சுற்றுப்பயணம் சென்று திரும்பியது பற்றி பண்டிதருக்கு அறிக்கை ஒன்று தந்துவிட்டதாகவும், இது, எல்லா மந்திரிகளுக்கும் சீக்கிரமே அனுப்பப்படுமென்றும் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

அறிக்கை பற்றி எதுவும் கூற மறுத்துவிட்ட அவர், 'நான் எனது கடமையைச் செய்துவிட்டதாக உணருகிறேன்; நான் கீதையில் நம்பிக்கையுடையவன்' என்றுமட்டும் கூறினாராம்!

தனது வெளிநாட்டுப் பயணம் மிகப் பயனுள்ளதாக இருந்தது என்றும், அமெரிக்காவிலும் கனடாவிலும் மக்களின் வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்திருப்பதாகவும், கனடாவில், ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் டெலிவிஷன் இருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் பிரச்சினைகளை அனுதாபத்துடன் கேட்டுத் தெரிந்துகொண்டனர் வெளிநாட்டவர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நாகர்களுக்கெனத் தனி மாநிலம் அமைக்க முடியாதாம்!

நிர்வாக உறுப்புத்தான் நிறுவப்படுமாம்

பண்டித பந்த் கூறுகிறார்

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய நாகர் நிர்வாக அமைப்பு, வெளிவிவகார இலாகாவின் கீழ் இருக்கும் என்று தெரிவித்த உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், நாகர்களுக்கென தனி மாநிலம் ஒன்று அமைத்துத்தருவது சாத்தியமில்லை என்றும் கூறினாராம்!

"நாகர்களின் தொகை சுமார் 10 இலட்சம்தான் இருக்கும்; இங்குள்ள ஐந்து மாவட்டங்களிலுமாக வசூலிக்கப்படும் வரி சுமார் ரூ. 10 இலட்சம் தான்; அசாம் சர்க்கார் ரூ. 3 கோடி ஒதுக்குவதுடன், மத்திய சர்க்காரும் தாராளமாக மானியம் வழங்கிக்கொண்டிருக்கிறது. இந்த மலைப் பிரதேச மாவட்டங்கள் பூகோள — ரீதியாக ஒரே தொடர்ச்சியாகவும் இருக்கவில்லை; அங்கு பல மொழிகள் பேசப்படுகின்றன; அவற்றின் கலாச்சாரம் பாரம்பரியம் எல்லாம் வேறுபட்டவை; எனவே, அவற்றிற்கென ஒரு தனி 'இராஜ்யம்' அமைக்க முடியாது"

என்று, மத்திய உள்நாட்டமைச்சர் பந்த் கூறியிருக்கிறார்.

இமானுவேல் படுகொலை

முத்துராமலிங்கத் தேவர் மற்றும் 11 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

பரமக்குடி, நவ. 4—

இமானுவேல் கொலை செய்யப்பட்டதையொட்டி முத்துராமலிங்கத் தேவர் எம். பி., மற்றும் 11 பேர்மீது பரமக்குடி ஜுடிஷியல் சப்-மாஜிஸ்திரேட் முன்பாக வழக்குத் தொடுக்கப்பட்டுவிட்டது.

இமானுவேலைக் கொலை செய்வதற்கு சதி செய்ததாகத் தேவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வழக்கில், இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் பணிக்கர் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படுவார்.

புதிய சிக்கல்கள் உருவாகுமாம்!

கழக உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 4—

சென்னை மாநிலத்தில் தீர்க்கப்படாத வழக்குகளைத் துரிதமாகத் தீர்ப்பதற்காக மாநில நீதிமன்றங்களுக்கு மேலும் அதிக நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை சென்னை வற்புறுத்தியுள்ளதாம். "பிரதம நீதிமன்ற நீதிபதிகளின் உதவியைக்கொண்டு மாவட்டங்களில் இதுவரை தீர்க்கப்படாத வழக்குகளைத் தீர்ப்பதற்குத் தடை என்ன?"

என்று நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"இப்போதுள்ள முறையை மாற்றி, புதிய முறையை உண்டாக்குவது மேலும் புதிய சிக்கல்களையே உண்டாக்கும்" என்று அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளித்தார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—11—57 செவ்வாய்

தற்கொலைகள்

★

கடந்த வெள்ளியன்று சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட தற்கொலை செய்துகொண்டோரின் பட்டியலில், வேலையின்மை, வறுமை காரணமாக—அந்த அவல முடிவை மேற்கொண்டவர்களின் எண்ணிக்கையும் அதில் இடம் பெற்றிருந்தது. ஓராண்டில் தற்கொலை செய்துகொண்ட 2,515 பேரில் 89 பேர்தான் வேலையின்மை, வறுமை காரணமாக அம்முடிவைக் கைக்கொண்டனர் என்று கணக்குத் தரப்பட்டிருக்கிறது. மேலும், இதர காரணங்களால் 544 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்ற கணக்கில், வேலையின்மை, வறுமை காரணமாகப் பலியானோரின் தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் தெரிவிக்கவில்லை. மேலும், இது, சர்க்காரின் கவனத்திற்கு வந்து பதிவு செய்யப்பட்ட கணக்குத்தான். தற்கொலை என்றில்லாமல், பலநாள் பட்டினி கிடந்து, கொஞ்சம் கொஞ்சமாக உயிரைக் கரைத்துக்கொண்டு, இறுதி மூச்சினைக் காற்றில் கலந்தோரின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.

சர்க்கார் தந்துள்ள கணக்குப்படியே, வேலையின்மை காரணமாக உயிரை மாய்த்துக்கொண்டவர் 89 பேர் என்ற தொகை அலட்சியப்படுத்தக்கூடியதல்ல!

இது தவிர, வேலையின்மை, வறுமை இவற்றின் உச்சமான இந்தத் தற்கொலை கொடுமைக்கு ஆளாகாமல், பிச்சை எடுத்தல், திருடுதல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் முதலிய விரும்பத்தகாத 'தொழில்'களில் தவிர்க்க முடியாமல், வேறு வழியின்றி ஈடுபட்டுக் கொடுமைப்படுவோரும் எண்ணற்றவர்களாயிருக்கின்றனர்.

பத்தாண்டுக் கால 'சுயராஜ்ய சர்க்கார்' இந்த நிலைமைகளை எல்லாம் உரிய கவலையோடு சிந்தித்து, நாட்டு மக்களின் வாழ்வுக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய கடமையைச் சரிவரச் செய்திருக்கிறார்கள் என்று கருதுவதற்கு, நாட்டு நிலைகள் இடம் தரவில்லை.

கோடிக்கணக்கான மக்களின் வாழ்வுபற்றிய மிகப் பெரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, பத்தாண்டுக் காலம் மிகக் குறுகியது என வாதிடப்பட்டாலும், அந்தப் பிரச்சினைகளை சரியான கண்ணோட்டத்தில் அணுகவும், புரிந்துகொண்ட பிரச்சினைகளின் ஆழத்திற்கு ஒப்ப சரியான திசையில் பரிகாரங்களைத் தேட முயற்சிக்கவும், இந்தப் பத்தாண்டுக் காலம் மிக அதிகமானது என்றால் அதில் தவறில்லை.

எல்லா மக்களுக்கும் வேலை, குறைந்தபட்சமான அடிப்படை வாழ்க்கைத் தேவைகள் இவற்றைத் தேடித் தருவதுதான், கடந்த பத்தாண்டுக் காலத்தில் இந்தியா முழுவதையும் ஆண்டுவரும் காங்கிரஸ் சர்க்காரின் அபிவிருத்தி முயற்சிகளின் பிரதான நோக்கமாயிருந்தது என்று நிச்சயமாகக் கூற முடியாது.

மேற்கொள்ளப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் போன்ற பிரம்மாண்டமான முயற்சிகள் கூட, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைப் பொறுத்து, எதிர்பார்த்ததற்கு நேர் எதிரான பலன்களை, விளைவாகப் பெற்றன என்பது கண்கூடு.

மேலும், வேலை தேடித்தரும் நிறுவனங்களின் அகில இந்தியத் தலைமை அலுவலர் வெளியிடும் சஞ்சிகை ஒன்றில், கடந்த ஆகஸ்டு திங்களில் மட்டும் வேலை தேடி பெயர்ப் பதிவு செய்தோரின் எண்ணிக்கை 8,28,653 என்று கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

பதிவு செய்தோரில் பெரும்பாலானோர் படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள்.

இராஜஸ்தான் என்ற சிறிய மாநிலத்திலேயே ஆண்டுதோறும் பத்தாவது வகுப்பிற்கு மேல் படித்துவிட்டு வேலை தேடுவோரின் எண்ணிக்கை 12,500 என்ற தகவலையும் அந்த இதழ் வெளியிட்டுள்ளது.

வடநாட்டில் உள்ள இராஜஸ்தான் மாநிலத்திலேயே நிலைமை அதுவானால், வடநாட்டைவிட சகல வளர்ச்சித் துறைகளிலும் பின்தங்கிக் கிடக்கும் தென்னாட்டில்—தமிழ் நாட்டில் நிலை என்னவாயிருக்கும் என்பதை யூகித்துக்கொள்ள, கஷ்டப்படத் தேவை இல்லை.

படித்தவர்களின் நிலை அது! காலாகாலமாய் விவசாயத்தை நம்பி வாழ்ந்துவந்தவர்களில் இலட்சக்கணக்கானோர், பற்றாக்குறை வேலையாலும், வேலையே இன்றியும் படும் கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று!

இப்படி, ஒரு கணிசமான அளவு மக்கள் வேலையின்றி அனுபவிக்கும் கொடூரமான வேதனைகள், பெயரளவில்வாழ்வு பெற்று காலந்தள்ளிக்கொண்டிருப்போரின் அரைகுறையான வாழ்விலும் சில தீய விளைவுகளை உண்டுபண்ணுகின்றன என்பதை, சமூக இயல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வேலையில்லாத் திண்டாட்டம் என்ற—மிக அவசர அவசியமாகக் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை, காங்கிரஸ் ஆளவந்தார்களின் கவனத்தை ஈர்த்துள்ள அளவு எவ்வளவு என்பதை நாட்டு மக்கள் சிந்தித்தாக வேண்டும். சர்வரோக நிவாரணியாகச் சித்தரிக்கப்படும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்கூட இந்தப் பிரச்சினைக்கு முதலிடம் தந்திருப்பதாக திட்டத்தின் கர்த்தாக்களேகூடக் கூறத் துணியார்.

நாளும் வளரும் இந்த வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்கு இந்தக் காங்கிரஸ் ஆளவந்தார்களால் பரிகாரம் தேட முடியுமா என்பது, அவர்களின் போக்குகளிலிருந்து பார்க்கும்போது சந்தேகமாகவே இருக்கிறது.

என்ன செய்வது, இவர்களைச் சகித்துக்கொண்டிருக்கின்றனரே, மக்கள்!

'சாதிகள் நீடிக்கும் வரையில் சாதிச் சண்டைகள் நடந்தே தீரும்'

'தி. மு. கழகம் பரவாத இடத்தில்தான் 'சாதி அரவம்' பயங்கரப் படமெடுத்து ஆடுகிறது'

'சாதியை ஒழிக்க, நாடு-மொழியின் பேரால் ஒன்றுபடுவோம்'

சென்னை-கோடம்பாக்கத்தில் அண்ணா விடுத்த வேண்டுகோள்

30-10-57-ல், சென்னை-கோடம்பாக்கத்தில் நடந்த தோழமைக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுகையில், சாதியின் பெயரால் நாட்டில் நடக்கும் கொடுமைகளை விளக்கி, நாடு-மொழியின் பெயரால் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்; அதன் விவரம் இங்கு தரப்படுகிறது (பேச்சின் முற்பகுதி நேற்று வெளியாகியுள்ளது) :—

"சாதிகளைத் தட்டிக்கொடுத்துதான் காங்கிரஸ் வளர்ச்சியடைந்திருக்கிறது. காங்கிரசில் இன்னும் சாதி தடித்திருக்கிறது. கொஞ்சம் மனக்கண்ணால் பாருங்கள்—சாதிக்கொரு மந்திரி என்றுதானே வைத்திருக்கிறார்கள்? திரு. காமராசர்கூட, மந்திரியாவதற்கு முன்தான் 'காமராஜ்' என்று அழைக்கப்பட்டார். இப்பொழுது 'நாடார்' என்றுதானே அழைக்கப்படுகிறார்! காமராசர் வருகிறார் என்றால் 'நாடார்' வருகிறார் என்கிறார்கள்.

"இன்னொரு மந்திரி—நாயக்கர்; இன்னொரு மந்திரி—முதலியார்; இப்படி மந்திரிகளைக்கூட சாதிப் பெயராலே தானே அழைக்கிறார்கள்? அமைச்சரவையே சாதிப் பெயரால்தான் இன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

"நீதி அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த நீதிக்கட்சியை இந்தக் காங்கிரஸ்காரர்கள் கிண்டல் செய்தார்கள்; 'சாதிக்கு ஒரு கட்சியா?' என்று கேட்டனர்.

"இந்த அமைச்சரவையில் திருமதி லூர்து அம்மையாரும் ஒரு மந்திரி; அந்த அம்மையார் கண்ணியமும் திறமையும் வாய்ந்தவர்; மிக நல்லவர். அவரைப் பற்றி நான் குறைத்துப் பேசவிரும்பவில்லை. ஆனால், நான் ஒரு காங்கிரஸ்காரரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, 'புதியவரான லூர்து அம்மையாரை என் மந்திரியாக்கினார்கள் என்பதற்கு அவர் காரணங்களைச் சொன்னார்—'அம்மையார் மிக்க திறமைசாலி; மந்திரி வேலைக்கான ஆற்றல் அவர்களிடமிருக்கிறது; அதனால்தான் அவரை மந்திரியாகப் போட்டார்கள்'—என்று அந்தக் காங்கிரஸ்காரர் கூறவில்லை; வேறு 4 காரணங்களைச் சொன்னார்—'அம்மையார் நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர்; புதிதாகத் தமிழ்நாட்டில் சேர்ந்த அந்தப் பகுதியினரைத் திருப்திப்படுத்தவும், அவர் பெண்ணாகையால் பெண்குலத்துக்குப் பிரதிநிதியாகவும், அதே நேரத்தில் கிறிஸ்தவ மதத்தினரைத் திருப்திப்படுத்தும் வரையிலும் ஆக இந்த 3 காரணங்களோடு, அம்மையார் 'அடக்கமானவர்' என்ற இன்னொரு காரணத்தையும் கூறினார்.

"இந்தக் காரணங்களெல்லாம் 'இராஜதந்திர'த்தை எடுத்துக் கூற வேண்டுமானால் மதிப்பாக இருக்கலாம்; இதற்கு அடிப்படைக் காரணம் சாதி என்பதை மறுக்க முடியாது.

"நாம் சாதியைக் கண்டிக்கும்போது, அய்யய்யோ, சாதியையா கண்டிக்கிறீர்கள்? அது, நான்முகன் படைப்பாயிற்றே! ஊசி முனையில் தவம் செய்து காப்பாற்றப்பட்டதாயிற்றே'— என்கிறார்கள், சிலர்.

"பைத்தியக்காரனை வீட்டிற்குள்ளே வைத்துக்கொண்டிருந்தால் துணி கிழியாமல் என்ன செய்யும்? 'கிழிந்த துணிகளைத் தைத்துக்கொள்ளுவோம்' என்று கூறினால், 'நீங்கள் நன்றாகத் தையுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால், ஜாக்கிரதையாகத் தையுங்கள்; தைக்கும்போது விரலிலே ஊசியைக் குத்திக்கொள்ளாதீர்கள்' என்றுதான் கூறுகிறோம்.

"சாதி இருக்கும்வரை முதுகுளத்தூர் நடக்கும்; தலைகள் உருளுவதும், வெட்டு, குத்து நடப்பதும் நிற்காது.

"இங்கு இருக்கும் ஓட்டைக் குடிசைகளில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களில் எவரேனும் தப்பித் தவறி படித்து உத்தியோகத்துக்குப் போய்விட்டால், உத்தியோகத்திலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

"முதுகுளத்தூர் பகுதியிலுள்ளவர்கள் உடல் வலிவில் மிக்கவர்கள்; எனவே, அங்கு தாழ்த்தப்பட்டோர்கள் விரட்டப்படுகிறார்கள். இந்தப் பகுதியிலுள்ளவர்கள் தந்திரத்திலே மிக்கவர்களாகையால் உத்தியோகத்திலிருந்து விரட்டப்படுகிறார்கள்.

"குறிப்பாக என் தொகுதியை எடுத்துக்கொண்டால் அங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்துவரும் தொல்லைகள் அதிகம். ஒருவர் செத்தால், அந்தப் பிணத்தைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதற்குகூட வயல் சொந்தக்காரர்கள் வழிதர மறுக்கிறார்கள். இதை சட்டசபையிலும் எடுத்துச் சொன்னேன்.

"அந்தத் தொகுதி பழங்குடி மக்களையெல்லாம் தண்டலம் என்னும் ஊரில் கூட்டி, முதலமைச்சர் காமராசரையும் வரவழைத்து, அவர்களுடைய குறைகளையெல்லாம் நேரில் முதலமைச்சரிடம் தெரிவிக்கச் செய்தேன். இதுவரை இந்த அரசாங்கம் அவர்கள் குறைகளைப் போக்க என்ன செய்தது? பிணம் தூக்கிச் செல்ல பாதை அமைத்துத் தந்ததா? இருக்கின்ற கிணறுகளிலும் தண்ணீரில்லாமல் இருக்கின்றன; ஒரு கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் இருட்டு நேரத்தில் அக்கிணற்றுப் பக்கம் போக முடியவில்லை. 'இதுபற்றிக் கேட்டால், கிணறு வெட்டவேண்டிய வேலைதான் எங்களுடையது; கைப்பிடிச் சுவர் கட்டவேண்டிய வேலை தாசில்தாரைச் சேர்ந்தது' என்கிறார்கள், 'பிளாக் டெவலப்மெண்ட்' அதிகாரிகள்! அமைச்சர் கக்கன்கூட அந்தத் தொகுதியில் வந்து சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். 'அண்ணாதுரையையும், தி. மு. கழகத்தையும் நம்பாதீர்கள்' என்று அவர் அங்கு பிரச்சாரம் செய்கிறார்; செய்யட்டும்; ஆனால், எனக்கு வெட்கம் ஏற்படும்படியாகவாவது அவர்கள் பாதை அமைத்துத் தந்தார்களா? என்பேரில் வெறுப்படைந்திருந்தால் பாதை அமைப்பதிலே என்ன இருக்கிறது?

"ஆதித் திராவிடர்கள் நலத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி எவ்வளவு என்பதை ஏட்டிலே பார்த்தால் மயக்கம் போட்டுவிடக்கூடிய அளவுக்குப் பெருந்தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். திட்டங்களெல்லாம் ஏட்டிலேதான் காட்டப்படுகின்றனவேயொழிய, நாட்டிலே பார்க்க முடிவதில்லை.

"பாட்டாளி மக்கள் அத்தனைப் பேரும் பாழான நிலையை அடைந்திருக்கும்வரை இந்த ஆட்சியை நல்லதெனக் கருத மாட்டார்கள். ஏட்டிலுள்ள திட்டங்களைநாட்டிலே காட்ட வேண்டும்; வறுமையால் கொட்டப்படும்தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்யப்பட வேண்டும்.

"'முதுகுளத்தூ'ரானாலும் 'முராளீஸ்கபே'யானாலும் அமளி ஏற்பட்ட பிறகுதான் கவனிக்கிறது சர்க்கார். பிரச்சினை கிளம்பும்போதே அதைப் பற்றி அக்கறை செலுத்துவதில்லை.

"இனாகுலேஷன், இஞ்செக்ஷன்—இந்த இரண்டும் ஊசி போடும் முறைகள்தான் என்றாலும், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. நோய் வருமுன்னே தடுத்து நிறுத்துவது இனாகுலேஷன்; நோய் வந்த பின்பு தடுக்க முயல்வது இஞ்செக்ஷன். இந்த சர்க்காருக்கு இஞ்செக்ஷன் போடத்தான் தெரியும்; நாங்கள், இனாகுலேஷன் போட வேண்டும்' என்கிறோம்,

'தேள் கொட்டிய பிறகு அவதிப் படுவதைத் தடுக்க முயற்சிப்பதைவிட முன்னமேயே, தேள்புகாத வீடு வேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம்; ஆனால் தேள் கடி மருந்து ஏராளமாக வைத்திருக்கிறோம்' என்கிறது சர்க்கார்

"பரமக்குடிக்கு அப்பால் நம் கழகம் பரவவில்லை. பரவாத காரணமென்ன? அங்கே நாம் கூட்டம் நடத்த முடியாத அளவுக்கு கடந்த 30 ஆண்டுகளாக அமைதியின்மை இருந்து வருகிறது. இந்த நிலையில்தான் சர்க்கார் அந்தப் பகுதியை விட்டு வைத்திருந்திருக்கிறது. அந்தப்பகுதியிலே, அரசியல் நாகரிகப்பண்பு பரவாத காரணத்தால்தான் கலகங்கள் நடக்கின்றன. இதற்கு யார் குற்றவாளி என்றால் அரசியல்வாதிகள் அத்தனை பேரும் தான்—நாம் உள்பட—என்பதை வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறேன்.

"கழகம் பரவக்கூடிய சூழ்நிலை அங்கு இல்லை; காரணம், எங்களுக்கு சர்க்கார் பாதுகாப்பு அளிக்கவில்லை. அதற்குக் காரணம், அங்கு தங்களுக்குள்ள செல்வாக்கு குறைந்துவிடும் என்பதுதான். அதனாலேதான் சாதி வெறி அங்கு இறங்கவில்லை.

"முதுகுளத்தூரிலே ஏற்பட்ட அந்த வெடிப்பு—வேதனை தரும் அந்த நிகழ்ச்சிகள், நாம் வெட்கித் தலைகுனிய வைக்கக்கூடியவையாகும்; தமிழன் வரலாற்றிலே கறைபடியச் செய்யும் அருவருப்பை உண்டாக்கும் சம்பவங்களாகும்.

"சாதி ஒன்று; 'ஒன்றேகுலம்—ஒருவனே தேவன்' என்ற ஓசை, இனி ஒவ்வொருவர் உள்ளத்திலும், வாழ்க்கையிலும் ஒலிக்க வேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் சாதி ஒழிய வேண்டுமென்று அச்சம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

‘முதலாளிகளின் ஏகாதிபத்தியத் துறை’யாகப் பஸ் போக்குவரத்து மாறுவதைத் தடுப்பதற்கு வாய்ப்பு

‘மாவட்ட ஆட்சிமன்றங்களின் ஆலோசனைகள் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த உதவும்’

‘ஆய்வுக் குழு’ அவசியம் பற்றி க. அன்பழகன்

சென்னை, நவ. 1—

பஸ் போக்குவரத்து பற்றி கொண்டுவரப்பட்ட பஸ், லாரி (திருத்த)ச் சட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு நமது கழக உறுப்பினர் தோழர் க. அன்பழகன் அவர்கள் கூறிய அரிய கருத்துக்கள் இங்கு தரப்பட்டுள்ளது:—

“இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களை ஆளும் கட்சியினர் சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். இது, பொதுமக்களின் நலனைப் பற்றிய பிரச்சினை; எனவே, நிர்வாகத்தினருக்கு மக்களுடைய கருத்துக்களை நாங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

“மாவட்ட கலெக்டர்கள் பொதுவாக நல்ல முறையில் பணியாற்றுபவர்களானாலும், சில நேரத்தில் தனிப்பட்டவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டிய நிலைமை நாட்டில் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதனால்தான், பொதுமக்களின் விருப்பு—வெறுப்புப் பற்றி கண்டறிந்த பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு ஆய்வுக்குழு அவசியம் என்று வற்புறுத்தவேண்டியுள்ளது.

“பொதுமக்களின் ஆதரவு பெற்ற பஞ்சாயத்து, மாவட்ட ஆட்சிமன்றங்களின் ஆலோசனைகளைக் கேட்டு காரியங்களை நடத்துவது மேலும் நிர்வாகத்தைத் திறம்பட நடத்த ஊக்குவிக்கும்.

“சென்ற தேர்தலில் பஸ் முதலாளிகள் ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருந்தனர் என்று மக்கள் மன்றங்களிலே பேசப்படுவது தவறு என்ற கருத்தை நிலைநாட்டவும் இது வாய்ப்பளிக்கும்.

“எங்களைப் பொறுத்தவரையில், பஸ் போக்குவரத்தை இலாபகரமாக அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்பது அடிப்படை விருப்பமாகும். அதைச் செய்யும் ஆற்றல் இல்லாவிட்டாலும், 5 பஸ்களுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கு 5 பஸ்கள் வரை ஓட்டுவதற்கு அனுமதி தரவும், அதிகம் உள்ளவர்களுக்கு அனுமதி தராமல் இருப்பதும், முதலாளிகளின் ஏகாதிபத்தியத் துறையாக பஸ் போக்குவரத்து மாறுவதைத் தடுப்பதற்குப் பயன்படும் என்று கூறவிரும்புகிறேன்.

“புதிய முறையில், ஆபத்தில்லாத தனியார் துறை வளரவும் இது ஆக்கமளிக்கும்.”

930 மைல் உயரத்தில் உலகைச் சுற்றுகிறது

ரஷ்யாவின் செயற்கைச் சந்திரன் பற்றி சில தகவல்கள்

லண்டன், நவ. 3—

இரண்டாவது செயற்கைச் சந்திரனை ரஷ்யா பறக்கவிட்டிருக்கிறதாம்; அதனுள் நாய் ஒன்றும் வைத்து அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

இந்தச் சந்திரனின் எடை 1,120·7 பவுண்டுகளாம்! முன்பு

(4-ம் பக்கம் பார்க்க)

‘மக்கள் தேவைக்கேற்ற அளவுக்கு பஸ்கள் இல்லை’

‘ஆய்வுக் குழு ஒன்று சட்டத்தை ஆராய வேண்டும்’

சட்ட மன்றத்தில் ஏ. கோவிந்தசாமி உரை

சென்னை, நவ. 1—

சென்னை சட்ட மன்றத்தில் பஸ், லாரி (திருத்த) சட்டத்தின் மீது நமது கழக உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

“இந்தச் சட்டத்தின் மீது கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்தத்தை ஆதரித்து நான் பேச விரும்புகிறேன்.

“இந்தச் சட்டத்தின் தன்மைகளை, ஆராய்ந்த பின்னர் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில் கவனிக்கப்பட வேண்டிய பல முக்கிய விஷயங்கள் உள்ளன; எனவே, ‘ஆய்வுக் குழு’வின் முடிவுகளுக்கு இந்தச் சட்டம் அனுப்பப்பட வேண்டியது மிக அவசியம் என்று நான் கூற விரும்புகிறேன். ‘ஆய்வுக் குழு’விற்கு விடவேண்டுமென வற்புறுத்தும் இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

“இந்த இலாகாவை நிர்வகிக்கும் அமைச்சர் இராமையா அவர்கள், அமைச்சராக வந்த பிறகு இரண்டு சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. பஸ் போக்கு-வரத்தில் மக்களுக்கு ஏற்படும் இடநெருக்கடியை நேரில் கண்டறிய அவர் மாறுவேடம்பூண்டு சென்றார் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது; அது உண்மையானால், பாராட்டத்தக்கது என்று கூறவிரும்புகிறேன். இத்தகைய அமைச்சர், பொது மக்களின் குறையை எதிர்க்கட்சிகள் எடுத்துக் கூறும்போது தட்டிக் கழிக்கமாட்டார் என்பதால் இதனைக் கூறுகிறேன். வேறொரு சம்பவத்தில், அமைச்சரவர்கள், அதிக வேகமாக ஓட்டிச் செல்லப்பட்ட பஸ் ஒன்றைத் தடுத்து நிறுத்த, தானே தன் காரில் அதைவிட அதிக வேகத்தில் செல்லவேண்டி இருந்தது என்றும் தெரியவருகிறது. சட்டப்படி அவரும் அதிக வேகமாகச் சென்றது குற்றமானாலும், சட்டத்தை மீறியும் — வரம்பைக் கடந்தும், அதிக வேகத்தில் பஸ் ஓட்டியதைத் தடுக்கச் சென்றார் என்பதைக் கேட்டு நான் இந்த மன்றத்தில் அவரைப் பாராட்ட விரும்புகிறேன். மேலும், தனது சுற்றுப் பயணத்தின்போது, போக்கு-வரத்து நிறுவன ஊழியர்களின் மாநாட்டைக் கூட்டி அவர்களின் குறைகளை அகற்றவும் முயற்சித்துள்ளார்; இதுவும் பாராட்டத்தக்கது.

“இப்போது மாவட்ட போக்குவரத்து நிர்வாகம் கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது; அவர்களுடைய திறமையில் எனக்குச் சந்தேகமில்லை; அது பற்றி யாரும் தவறாகக் கருத வேண்டாம். அத்துடன், அவருக்கு உதவியாக அந்தந்தத் தொகுதி சட்டமன்ற, பாராளு மன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தவும், கூடுமானால் மாவட்ட நீதிபதி ஒருவரை நியமிக்கவும் முன்வருவது மக்கள் நலனுக்கு வழிகாட்டுவதாக இருக்கும்.

“இப்போது, மக்களுக்குத் தேவையான அளவுக்குப் பஸ்கள் இல்லை. இந்த நிலையில் ஒரு சோதனைக் குழுவின் முடிவுகளுக்கு சட்டத்தை விடுவது நல்லது என்று கூற விரும்புகிறேன்.”

‘சில கிராமப் பகுதிகளில் பஸ் வசதியே இல்லை’

‘தனியார் இலாபத்திற்கு இடமளிக்காதீர்’

‘மக்களுக்குத் தொண்டாற்ற முன்வாரீர்’

சட்டமன்றத்தில் எம். பி. சுப்பிரமணியம் பேச்சு

சென்னை, நவ. 1—

சென்னை பஸ், லாரி (திருத்த) சட்டத்தின்மீது நமது கழக உறுப்பினர் தோழர் எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

“இப்போது விவாதத்தில் உள்ளது, அரசாங்கம் ஏற்கனவே பிறப்பித்துள்ள ஒரு சட்டம். இதன்படி மாவட்ட போக்குவரத்து நிர்வாகம் கலெக்டர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

“ஏற்கனவே மாவட்ட கலெக்டர்களுக்கு அதிக வேலையுள்ளது என்று பல கருத்துக்களை ஆராய்ந்தவர்கள் அறிவித்துள்ளனர். கலெக்டர்களிடமே போக்குவரத்து நிர்வாகத்தையும் ஒப்படைப்பது உகந்ததாகாது. கலெக்டர்களின் நிர்வாகத் திறமையில் எனக்குச் சந்தேகம் இல்லை; ஆனால், இதையே ஏன் ஒரு மாவட்ட நீதிபதி பொறுப்பில் விடக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

“இரண்டாவதாக, புதிய வழியில் பஸ் ஓட்ட அனுமதி தரப்படும்போது அனுமதி பெற்றவர்கள், பஸ் மதிப்பையும், அனுமதியையும் சேர்த்து அதிகத் தொகைக்கு விற்றுவிடுகிறார்கள். இது ஒரு வியாபாரமாகிவிட்டது. எனவே, ‘அனுமதியைப் பயன்படுத்தாவிட்டாலும், திடீரென நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டாலும் அந்த அனுமதியை மீண்டும் அரசாங்கத்திடமே ஒப்படைத்துவிட வேண்டும் என்று சட்டத்தில் நிபந்தனை இருக்கவேண்டும்.

“இரண்டாவது, போர்மூண்ட பிறகு பஸ்கள் இரட்டிப்பாக அதிகரித்துள்ளன; ஆனால் புகைவண்டிகளின் நிலை மாறவில்லை; எனவே, புகைவண்டி மூலம் பிரயாணம் செய்யும் வசதியில்லாத பகுதிகளில் அதிக பஸ்களை விடவேண்டும். ஒரு சில கிராமப் பகுதிகளில் பஸ் வசதியே இல்லை.

“கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். இரவு நேரத்தில், லாரிகள் ஓட்டப்படுவது அதிக விபத்துக்களுக்குக் காரணமாக உள்ளது. எனவே, லாரிகள் எத்தனை மைல்கள் தொடர்ந்து ஓட்டலாம் என்றவிதி இருக்கவேண்டும். மேலும், வேகம், பற்றிய நல்ல முடிவுகளும் வேண்டும். எனவே, இந்தச் சட்டத்தை ஒரு ஆய்வுக் குழுவிற்கு அனுப்புவது நல்லது.”

‘போக்குவரத்து நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்பு கொள்ள வேண்டும்’

சட்ட மன்றத்தில் ப. உ. சண்முகம் யோசனை

சென்னை, நவ. 1—

சென்னை சட்ட மன்றத்தில் கொண்டுவரப்பட்ட, மோட்டார், லாரி (திருத்த) சட்டத்தின் மீது கொண்டுவரப்பட்ட எதிர்க்கட்சி திருத்தத்தின்மீது நமது கழக உறுப்பினர் தோழர் உ. ப. சண்முகம் அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

“இந்தச் சட்டத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்தின் போக்கு-வரத்து மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட சிறப்பாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. மேலும் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்கு ஒரு சில நல்ல ஆக்க யோசனைகளைக் கூறவேண்டும் என்ற நோக்கத்துடன் நான் திருத்தத்தை ஆதரித்துப் பேசுகிறேன்.

“இன்று, சென்னை மாநிலப் போக்கு-வரத்தின் நிர்வாகத்தை மாவட்ட ரீதியாகக் கலெக்டர்கள் பொறுப்பேற்று நடத்திவருகின்றனர்; இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதை நான் வரவு—செலவுத் திட்டத்தின் மீது பேசுகையில்கூடக் குறிப்பிட்டிருந்தேன்.

“செங்கற்பட்டு மாவட்டத்தில் பஸ் போக்குவரத்தை ஒரு வழியில் நடத்தி வந்தவர் இலாயக்கற்றவர் என்று முடிவுச் செய்யப்பட்டது; ஆனால், அதே நபருக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் வேறு ஒரு வழியில் பஸ் ஓட்ட புதிய அனுமதி தரப்பட்டது. அதற்கு உண்மையான காரணம் என்னவென்பதை நான் வெளிப்படுத்தவிரும்பவில்லை. நான் கேட்க விரும்புவதெல்லாம்—ஏற்கனவே வேலைப்பளு அதிகரித்துள்ள மாவட்ட கலெக்டர்களிடம் அதிகப் பொறுப்பு தருவது நியாயமா? மாவட்ட போக்குவரத்து நிர்வாகமும் கலெக்டரிடம் ஒப்படைப்பதேன்?—என்பதுதான்.

“மேலும் புதிய வழிகளில் பஸ் ஓட்ட அனுமதி தருவது பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் அபிவிருத்திக் குழு உள்ளது; அந்தக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டாவது முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையேனும் அரசாங்கம் செய்யுமா?

“கடைசியாகக் கூறவிரும்புகிறேன்; மாநில—மாவட்ட போக்குவரத்து நிர்வாகத்தில் மக்கள் பிரதிநிதிகளைத்—தொடர்பு கொள்ளச் செய்வது மேலும் நிர்வாகத்தைச் சிறப்படையச் செய்யும்.”

தோழர் க. அன்பழகன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

மதுரை:

5—10—57 இரவு 9 மணிக்கு மதுரை தமுக்கம் கலையரங்கில் தபால்-தந்தி இலாகா ஊழியர்களால் தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற இருந்த நாடகம், எதிர்பாராத மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

6—10—57 காலை 10 மணியளவில், மதுரை தெற்குமாசி வீதியில் தோழர் இரா. ஏழுமலை-தனம் தம்பதிகளின்மகன் ‘தமிழ்ச்செல்வனு’க்கு தோழர் க. அன்பழகன் அவர்கள் எழுத்தறிவிப்பு நடத்திவைத்தார்கள். தோழர்கள் சந்தானம், புலவர் புதுமைவாணன், புலவர் க. திருமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிய பின் தலைவர் விளக்கமானதோர் முடிவுரை கூறினர்.

பொள்ளாச்சி:

மார்க்கெட்ரோடு, வள்ளுவர் திடலில் அன்று இரவு 7-30 மணிக்கு, தோழர் பி. எஸ். நடராசு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் பி. என். இராமனுசம் அனைவரையும் வரவேற்றார். தோழர்கள் புதுமைவாணன், மதுரை சந்தானம் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள் சொற்பொழிவாற்றினர். அவருக்குப் பல கிளைகளின் சார்பில் கைத்தறி ஆடையும், மலர் மாலையும் அணிவிக்கப்பட்டன.

அவர் பேசுகையில், நமது கழகம் சட்டசபையில் ஆற்றிவரும் பணியை விளக்கினர்; வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்ப்பதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

கோப்பனூர் புதூர்:

அன்று இரவு 11 மணிக்கு கழகக் கூட்டம் நிகழ்ந்தது. ஏராளமான தாய்மார்களும், ஆடவர்களும் கூடியிருந்தனர். தோழர்கள் பி. என். இராமானுசம், புதுமைவாணன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசியபின் தோழர் க. அன்பழகன் அவர்கள் நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

வேலாயுதம்பாளையம் (திருச்சி):

7—10—57 மாலை நடைபெற இருந்த கழகக் கூட்டத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றிருந்தன; தோழர் அன்பழகன் அவர்களும், மதுரை சந்தானம் அவர்களும் வந்திருந்தும், விடாமழையினால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

காங்கேயம் (கோவை):

8—10—57 மாலை 7 மணிக்கு காங்கேயம் காந்தி திடலில் தோழர் ஏ. எஸ். இராமசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இரத்தினவேலு, சிவப்பிரகாசம், சந்தானம் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் அவர்கள், கழகக் கொள்கைகளையும் திட்டங்களையும் விளக்கிப் பேசினர்; அவருக்குப் பல கழகங்கள் மாலை அணிவித்தன.

ஈரோடு:

9—10—57 மாலை 7 மணியளவில், ஈரோடு நகரில், தோழர் இரத்தினவேல் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அப்பாவு, சிவப்பிரகாசம் ஆகியோர் பேசியபின், அன்பழகன், ‘சென்னை சட்டமன்றத்தில் கழகத்தின் பணி’யினை விளக்கியும், இந்தி ஆதிக்கத்தை வீழ்த்தவேண்டிய அவசியம் குறித்தும் விரிவாகப் பேசினர்.

சிவகாசி:

12,10-57 மாலை 5-30 மணிக்கு சாத்தூர் சாலையில், சாமி படிப்பகத் திறப்புவிழா நடைபெற்றது; நகர தி. மு. க. செயலாளர் எஸ். ஏ. ரசாக் தலைமைவகித்தார்; தோழர் அன்பழகன் அவர்கள் கழகக் கொடியை உயர்த்தி வைத்து, சாமி அவர்களின் தூய தொண்டையும் இளைஞர் கடமையையும் விளக்கினர். தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் சாமியின் தன்னலமற்ற வீரத் தொண்டை விளக்கி அவர் படத்தைத் திறந்துவைத்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஸ்தல ஸ்தாபனம் பற்றிய 'வெள்ளை அறிக்கை'

'தலைவருக்குத் தகுதிகள் வேண்டும்'

—சி. நடராசன்

'தாழ்த்தப்பட்டோர் நலனைப் பாதுகாக்க வேண்டும்'

—பி. எஸ். சந்தானம்

சென்னை, நவ. 4—

சென்னை மாநில ஸ்தல ஸ்தாபனங்களை மாற்றியமைப்பதுபற்றித் தயாரிக்கப்பட்டுள்ள 'வெள்ளை அறிக்கை'யை இன்று அமைச்சர் லூர்து அம்மையார் சட்டமன்ற விவாதத்திற்குக் கொண்டுவந்தார்கள். விவாதத்தில் கலந்துகொண்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட பெரும்பாலும் பேசியவர்கள், 3 ஆண்டுக் காலத்தை 5 ஆண்டுகள் என்று நீடிப்பதையும், வெளிப்படையாக வாக்களிக்கும் முறையைக் கண்டித்தும், தலைவர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது நல்லது என்றும் கருத்துக்கள் தெரிவித்தனர்.

விவாதத்தில் நமது கழக உறுப்பினர்களான தோழர்கள் சி. நடராசன், பி. எஸ். சந்தானம் கலந்துகொண்டனர்.

தோழர் சி. நடராசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இப்போது இயங்கிவரும் ஸ்தல ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுள்ள முறையே நல்லபடி இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இருப்பினும் 'வெள்ளை அறிக்கை'யில் காணப்படும் சில முக்கியப் பகுதிகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

"பஞ்சாயத்து நிறுவனத் தலைவர்களுக்கு எந்தவிதத் தகுதி அம்சமும் குறிப்பிடப்படவில்லை; இது மிகவும் வருந்தத்தக்கது. பஞ்சாயத்துத் தலைவர் பல பொறுப்புள்ள காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளது. அத்தகையவர் தனக்குள்ள பொறுப்பை உணர்ந்து நன்றாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால், அதற்கான தகுதியும் அவருக்கு இருக்க வேண்டும். இப்போது உள்ள அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் காணப்படவில்லை. எழுதத் தெரியாதவர், படிக்கத் தெரியாதவர்கூடத் தலைவராக வர முடியும். எனவே, குறைந்த அளவு எழுத்தறிவு படைத்தவர்களை மட்டும் தலைவர்களாக வர இலாயக்குள்ளவர்களாகச் செய்ய வேண்டும்.

"மேலும், தலைவர் தேர்தல் மக்கள் வாக்குகளைக்கொண்டு அவர்கள் விருப்பப்படி நடைபெற வேண்டும்.

"ஊழல் மலிவதுதான் பஞ்சாயத்துக் காலம் 5 ஆண்டுகளாக நீடிக்கப்படுவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது; இது, ஊழலை அதிகரிப்பதையே உண்டாக்கும் என்று நான் கூற விரும்புகிறேன்.

"பஞ்சாயத்துக்களில் பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும்; அதைப்பற்றி அறிக்கையில் ஒன்றும் காணப்படவில்லை. அவசியம் பெண்களுக்கும் பஞ்சாயத்துக்களில் இடம் தர வேண்டும்.

"இன்று பல பஞ்சாயத்துக்களில் தீர்வைகள் வசூலிக்கப்படாமல் இருப்பது, தலைவர்களின் வரிமுறைகள் பற்றி தெளிவு இல்லாததையே காட்டுகிறது. பஞ்சாயத்துத் தீர்ப்புக்கள் பல சமயங்களில் சரியாக இல்லாததற்கும் அதுவே காரணம்."

தோழர் பி. எஸ். சந்தானம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"மக்கள் அனைவரையும் ஒன்றாக ஒரு இடத்தில் கூட்டி, எது நியாயமோ, எது தேவையோ, அதை முடிவு செய்யும் சபைக்கே பஞ்சாயத்து என்று கூற வேண்டும். 'தன் கையே தனக்கு உதவி' என்பதுபோல, மக்கள், தங்கள் நலனைத் தாங்களே உருவாக்கிக்கொள்ளுவதற்கு வசதி செய்ய வேண்டும். அதைச் செய்ய இந்த அறிக்கையில் தெளிவாக ஒன்றும் காட்டப்படவில்லை. இப்போது சில இடங்களில் ஒரு சில சுயநலவாதிகள் சரிவர வேலை செய்யாமல், பின்தங்கிய மக்களை ஒதுக்கியும் புறக்கணித்தும் வருகின்றனர்.

கிராம நலனைப் பாதுகாக்கவும், மக்களின் முன்னேற்றத்திற்கு நல்வழி தேடுவதற்கும் 'பிளாக்' வளர்ச்சி அதிகாரியையும், 'சேவக்'குகளையும் நியமிப்பது, கருவாட்டுக் கடைக்குக் காக்கையைக்காவல்வைப்பதுபோல் ஆகும்.

"இன்று பஞ்சாயத்துக்களில் ஊழல் மலிந்துள்ளதென்றால் அதற்கு யார் காரணம்? அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு. சரியான ஆட்களையும், அதிகாரிகளையும் நியமிக்காதது யார் குற்றம்?

"இந்தப் பஞ்சாயத்து அமைப்புக்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனைக் கவனிக்கத்தக்க திட்டம் தீட்டப்பட வேண்டும். அவர்கள் குடியிருக்கும் பகுதிகளில் சாலை அமைப்புக்கும், அவர்களின் சுகாதார, கல்வி முன்னேற்றத்திற்குமான சலுகைகள் அறிக்கையில் காணப்படவில்லை.

"இதை எல்லாம் அரசாங்கம் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

தடம் புரண்ட கூட்ஸ் வண்டி

சேலம், நவ. 3—

சேலம் சந்திப்பிலிருந்து ஜோலார்பேட்டைக்குச் சென்ற கூட்ஸ் இரயிலின் ஒரு பெட்டி, சுமார் 15 மைல் தூரத்தில் தின்னபட்டி—டேனிஷ்பேட்டை நிலயங்களுக்கிடையில் 2-ந் தேதி மாலை சுமார் 4-30 மணிக்கு தண்டவாளத்தைவிட்டுக் கீழிறங்கியதன் காரணமாக விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தினால் யாதொரு சேதமும் ஏற்படவில்லை.

சேலம் சந்திப்பிலிருந்து சென்னைக்கு நேற்றிரவு சென்ற மெயில்கள் சுமார் 5 மணி நேரம் தாமதமாகச் சென்றன.

சென்னையிலிருந்து சேலத்திற்கு வந்த மெயில் இன்று (3-ந் தேதி) காலை சுமார் 8 மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது. இன்று காலை சுமார் 2 மணிக்கு விபத்து நடந்த இடத்தின் இரயில்பாதை பழுதுபார்க்கப்பட்டது. (ந-நி.)

கழகக் கூட்டங்கள்

வல்லம் (தஞ்சை):
மாரியம்மன் கோவில் திடல்
6—11—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: எஸ். ரெங்கசாமி
பேசுபவர்:
சி. பி. சிற்றரசு

☆

ஒறக்காட்பேட்டை:
(செங்கற்பட்டு மாவட்டம்)
சின்னத் தெருவில்
7—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: க. திருநாவுக்கரசு
பேசுவோர்:
அண்ணா
சி. வி. எம். அண்ணாமலை
ஜே. ஏ. வகாப்
சோ. க. சுந்தரேசன்

கோவை மாவட்டத்தில் பஞ்சாயத்து நிறுவனங்கள்

சென்னை, நவ. 4—

கோவை மாவட்டத்தில் மொத்தம் 444 பஞ்சாயத்து நிறுவனங்கள் உள்ளன என்றும், இவைகளில் 429 நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் அங்கம் வகிக்கின்றனர் என்றும், சராசரி 14.9 தாழ்த்தப்பட்ட பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர் என்றும் அமைச்சர் லூர்து அம்மையார், சட்டமன்றத்தில், கேள்விநேரத்தின்போது தெரிவித்தார்.

அன்பழகன் சுற்றுப்பயணம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 7 மணியளவில், மாரியம்மன் கோவில் திடலில், தோழர் ஏ. சுப்பையா எம். சி. தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நிகழ்ந்தது; ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். தோழர்கள் வே. கருணாகரன் எம். எஸ். இராமசாமி ஆகியோர் இந்தி நுழைக்கப்படுவதன் அநீதியை விளக்கிப் பேசினர். அடுத்து, 'இந்திக் கண்டனத் தீர்மானம்' பலத்த கைதட்டலுடன் நிறைவேற்றப்பட்டது. இறுதியாகத் தோழர் அன்பழகன் அவர்கள் தென்னாட்டு மக்களை என்நாளும் அடிமைத்தளையில் சிக்கவைக்கும் சூழ்ச்சியாகவே இந்தி புகுத்தப்படுவதை விரிவாக விளக்கிப் பேசி, அதை எதிர்த்திட அனைவரும் தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பேராசிரியருக்கும், பேச்சாளர்களுக்கும் நா தி. மு. க. கிளை, திருத்தங்கல், தாயல்பட்டி, அம்மன் கோவில்பட்டி கிளைகள் சார்பில் கைத்தறித்துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

புதுப்பட்டி:

14—10—57 மாலை 6½ மணியளவில் புதுப்பட்டி கழகக் கிளை திறப்புவிழா நடைபெற்றது. தோழர் ஆதிமூலம் எம். எல். ஏ. அவர்கள் கழகக் கொடியை உயர்த்தினார். தோழர் க. அன்பழகன் அவர்கள் கொள்கைகளை விளக்கிக் கூறி, கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர் அன்புமணி சொற்பொழிவாற்றியபின் செயலாளர் தோழர் அ. அப்பாதுரை வந்த தலைவர்கட்கு கைத்தறித்துண்டு அணிவித்து நன்றிகூறக் கூட்டம் முடிந்தது.

முக்கூடல்:

14—10—57 இரவு 8 மணிக்கு காந்தி திடலில் தோழர் மா. சு. முத்துகுட்டி (பஞ்சாயத்து உறுப்பினர்) தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் வழக்கறிஞர் டி. சிவந்தி, பம்பாய் ஆரியசங்காரன், அன்புமணி எம். ஏ., டி. எஸ். ஆதிமூலம் எம். எல். ஏ., ஆகியோர் பேசியபின் இந்திக் கண்டனத் தீர்மானம் பலத்த கைதட்டலிடையே நிறைவேற்றப்பட்டது. இறுதியில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கழகத் தீர்மானத்தின் நோக்கத்தையும், அவசியத்தையும் விளக்கி விரிவாகப் பேசினார்.

பேராசிரியருக்கும், மற்றவர்கட்கும் கைத்தறி, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. கூட்டம் இரவு 12 மணிவரை நடைபெற்று நன்றி கூறலுடன் முடிவுற்றது.

கல்லக்குடி:

கல்லக்குடி தி. மு. கழகச் சார்பில் 16—10—57 மாலை 6½ மணியளவில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அ. தம்புசாமி தலைமை வகித்தார். தோழர்கள் குளித்தலை முத்துக்கிருட்டினன், அம்பில்—தருமலிங்கம் ஆகியோர் பேசியபின் தோழர் அன்பழகன் அவர்கள் 'இந்தி ஆதிக்கத்தால் விளையும் கேடு'களை விளக்கி, நீண்ட உரை நிகழ்த்தினார். பேராசிரியருக்கும், மற்றவர்கட்கும் கழகச் சார்பிலும், பிற கிளையினராலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. கண்டனத் தீர்மானம் பெருத்த கையொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

அண்ணா விடுத்த வேண்டுகோள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

—தயை — தாட்சண்யமின்றி பாடுபடுகிறது.

"பலாத்காரம் வேண்டாம்; வெட்டு, குத்து, கொலை இப்படிப்பட்ட செயல்களைத் தூண்டக்கூடியதாக உள்ள சாதி வெறியைச் சுட்டெரியுங்கள்; உடலை—உள்ளத்தைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கூறுகிறோம்.

"'சாதி பேதங்களை நீக்க வேண்டுமென்றால், 'சாதிகள் இன்று நேற்று உண்டானவை அல்ல; சாஸ்திரத்திலும் வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது' என்கிறார்கள். அடுத்தபடி, 'சாஸ்திரமும் பொய்—வேதமும் பொய்' என்று நாங்கள் கூறவேண்டியிருக்கிறது; 'வேதத்தையா பொய் என்கிறீர்கள்? அது கடவுளால் அடியெடுத்துக் கொடுத்து எழுதப்பட்டதாயிற்றே!' — என்கிறார்கள்; 'அப்படியானால், சாதிகளை உண்டாக்கக்கூடிய அப்படிப்பட்ட ஆண்டவனும் இல்லை—இருக்க முடியாது' என்கிறோம். இப்படிக்கூறும் எங்களை 'நாஸ்திகர்கள்' என்று கூறாமலிருப்பார்களா?

"நாங்கள் தி. மு. கழகம்—புகாத இடத்தில்தான் அந்த சாதி அரவம் பயங்கரப் படமெடுத்தாடி நாசவேலை செய்திருக்கிறது. கழகம் பரவியுள்ள இடங்களிலெல்லாம் சாதியின் பெயராலே எந்தத் தலையும் உருளவில்லை.

"இந்த சாதி ஒழிப்பு ஒன்றிலாவது கட்சி பேதமின்றி—படித்த பார்ப்பனர்கள் உள்பட—அத்தனைப் பேரும் ஒன்றுகூடி பாடுபட வேண்டும்.

"இன்னும் பலபேர்—வெட்கத்தோடு ஒப்புக்கொள்ளுகிறேன் — தங்கள் சாதி உணர்ச்சியை மறக்கவில்லை. பொது மேடையில் பேசும்போதும், கவிதை எழுதும்போதும் நாடகமாடும் பொழுதும் சாதி ஒழிய வேண்டும் என்கிறார்களே தவிர, உள்ளத்திலுள்ள சாதியை மறக்கவில்லை. இதை நான் உள்ளத்தைத் திறந்து சொல்கிறேன். உள்ளதை மறைத்துப் பயனில்லை; மறைத்து மறைத்துத்தான் இந்த நிலைக்கு வந்திருக்கிறோம்.

"சீர்திருத்தப் பிரச்சாரம், தில்லை தீட்சிதர் காலத்திலே நந்தனார் தீயிலிட்டுப் பொசுக்கப்பட்டாரே அந்தக் காலந்தொட்டு தான் இந்த நாட்டில் நடந்துவருகிறது.

"இந்தப் பிரச்சாரத்தை எல்லா கட்சிகளும் செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். நல்ல அறிவுப் பிரச்சாரமும் செய்ய வேண்டும். இதைச் செய்தால் 'தலைவெட்டும்' தன்மையும், 'குடிசை கொளுத்தும்' தன்மையும், 'காலித்தனமும்' தானே போய்விடும். சட்டசபையில் இதுபற்றிப் பேசினால் மட்டும் போதாது.

"தூங்கியவனைத் தட்டி எழுப்பியதுபோல் எழுப்பி, நல்ல அறிவு தரும் சோதனையை முதுகுளத்தூர் சம்பவம் நமக்குத் தந்திருக்கிறது.

"இன்றுமுதல் சாதியுணர்ச்சியைவிட்டு, அனைவரும் ஒன்றுபட்டாக வேண்டும். அவரவர்கள் சாதி சாதியாக ஒன்றுபடாமல், வேறொன்றில் ஒன்றுபடவேண்டும்; மொழியாலும், நாட்டாலும் ஒன்றுபட முடியாவிட்டால் வேறு எதனால் ஒன்றுபட முடியும்? தமிழ் மொழி—திராவிடநாடு என்ற அளவில் எல்லோரும் ஒன்றுபட வேண்டும்.

"'இந்தியன்' என்ற முறையில் ஒன்றுபடக் கூடாதா என்றால், தமிழர்கள் நித்தம் நித்தம் காதில்விழும் பெயரை விட்டு, என்றோ ஒருநாள் சொல்லக்கூடிய 'இந்தியர்' என்ற பெயரையா பதிய வைத்துக்கொள்ள முடியும்? 'அண்ணன்' பெயரே மறந்துவிடுகிறது என்றால், அடுத்த வீட்டுக்காரனின் பெயரையும் நினைத்துக் கொண்டிருக்கவா முடியும்?

"திராவிட இன உணர்ச்சியும், தமிழ் மொழியுணர்ச்சியும் வளர வளர சாதியும், அதனால் விளையும் கொடுமைகளும் நிச்சயம் ஒழிந்து போகும். சாதி என்பது நாட்டுக்கும், நமக்கும், நமது அறிவுக்கும் 'மாசுபடுத்தும் அவமானச் சின்னம்' என்பதை உணர்ந்து அனைவரும் ஒன்றுபட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

930 மைல் உயரத்தில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பறக்கவிடப்பட்ட கிரகத்தின் எடை 183 பவுண்டுகள்தான்!

செயற்கைச் சந்திரனிலிருந்து ரேடியோ செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நாய் நல்ல நிலையிலேயே இருப்பதாக அந்தச் செய்தி சொல்லுகிறதாம்!

கொஞ்ச நாட்களில் அந்த நாய் பூமிக்கு அனுப்பப்படுமாம்! அனுப்பப்படுவதற்கு முன்னால் ரேடியோ செய்தி அறிவிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்! பூமிக்கு அனுப்பப்படும்போது, அந்த நாய் இறந்துவிடாமல் இருக்க விசேட சாதனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவாம். கிரகத்திலிருந்து அது பூமிக்கு வந்துசேர இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் ஆகுமாம்.

சோவியத் புரட்சியின் 40-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும்வகையில் இந்தக்கிரகம் அனுப்பப்பட்டிருக்கிறது என்று 'டாஸ்' செய்தி நிறுவனம் அறிவித்திருக்கிறது.

செயற்கை சந்திரனில் உலகைச் சுற்றும் நாய்

'க்ஷேமலாபம்' பற்றி மாஸ்கோ வானொலி

மாஸ்கோ, நவ. 4—

இரண்டாவது 'ஸ்புட்னிக்' என்றழைக்கப்படும் ரஷ்ய செயற்கைச் சந்திரனில் வைக்கப்பட்டுள்ள நாய் சுகமாகவே இருக்கிறது என்றும், இதுவரை அரை டன் எடையுள்ள அந்தச் சந்திரன் சுமார் 800 மைல் உயரத்தில் மணிக்கு 18,000 மைல் வேகத்தில் உலகத்தை ஆறு தடவைகள் சுற்றிவிட்டது என்றும் மாஸ்கோ வானொலி அறிவித்துள்ளது.

மணவழகர் மன்றம்

6—11—57 மாலை 6-30 மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை முருகேச முதலித் தெரு 2-ம் எண்ணுள்ள கட்டடத்தில் 'திருக்குறள் வகுப்பு' திரு. புலவர் தனக்கோட்டி அவர்களால் நடத்தப்பெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.